
May 18, 2020

# Growing of Chicken (Broiler)

# இறைச்சிக் கோழி வளர்ப்பு

## கூடு அமைக்கும் முறைமை:



சிறந்த காற்றோட்டம் உள்ள கூடுகளை அமைப்பதே கோழி வளர்ப்பிற்கு மிக உகர்ந்தது. கூட்டின் நீள அகலங்களை உங்கள் விருப்பின் பிரகாரம் நீங்கள் தீர்மானிக்கலாம். ஆனாலும் உயரம் பக்க வாட்டில் 6 அடியாகவும் நடுவில் 8 அடியாகவும் இருத்தல் அவசியமாகும். இறைச்சிக் கோழி வளர்ப்பதாயின் ஒரு கோழிக்கு ஒரு சதுரடி இட வசதி இருக்க வேண்டும். வளர்க்கவிருக்கும் கோழிகளின் எண்ணிக்கைக்கு அமைவாக கூட்டின் நீள அகலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம்.

படத்திலுள்ளவாறு பக்கவாட்டிற்க்கு தரைலிருந்து ஒன்றறை (1½) அடிக்கு மறைப்பு அமைத்து மேல்ப்பகுதியை கம்பி வலையினால் அமைக்க வேண்டும். கூட்டில் தரைக்கு 6 அங்குல உயரத்திக்கு உமி அல்லது மரத் தூள் பரவ வேண்டும். கிழமைக்கு இரு முறை கட்டயமாக தரையிலுள்ள எச்சங்களை அகற்றி புதிதாக உமி அல்லது மரத்தூள் பரவவும். எப்போதும் தரை ஈரப்பதமற்றதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். கிழமைக்கு இரு முறையாவது கூட்டையும் உணவு மற்றும் தண்ணீர்ப் பாத்திரங்களை தொற்று நீக்கியினால் கழவுமிடத்து ஆரோக்கியமான கோழிகளை எதுவித அபாயத் தொற்றுக்கள் இன்றி பாரமரிக்க முடியும்.

இறைச்சிக் கோழிகள் (Broilers) ஆண் பெண் இரு பால் கோழிகளும் அடக்கியதாய் இருக்கும். இறைச்சிக் கோழியின் வாழ்வு காலம் அதி கூடியது ஏழு வாரங்களே. 40 முதல் 42 நாட்களில் இவற்றின் உடல் நிறையை அடையும் தன்மை கொண்டவை. 6 முதல் 8 கோழிகளுக்கு ஒரு 18 அங்குல விட்டமுள்ள வட்ட உணவு பாத்திரமும் 9 லீட்டர் தண்ணீர்ப் பாத்திரம் அவசியமானது.



No: 17, Raja Veethi, Atchuvely(NP), Sri Lanka | Tel: 94(0) 777 204 883
www.royjoygroup.com | farm@royjoygroup.com

இறைச்சிக் கோழிகள் இருந்த இடத்திலிருந்து உணவு தண்ணீர் அருந்திய பிறகு அதே இடத்திலேயே தூங்கும். 23 மணி நேரம் இவை உணவு தண்ணீர் அருந்த வேண்டும். ஒரு மணி நேரம் மட்டும் இவர்களுக்கு இருட்டு வேண்டும். ஆகவே சாப்பாட்டு மற்றும் நீர்ப் பாத்திரங்கள் கூடுதலாகத் தேவைப் படும். கோழிகளுக்கு கூட்டில் 23 மணி நேரம் வெளிச்சம் அவசியம் என்பதால் பகல் நேரம் தவிர வெளிச்சம் குறைவான தருனத்தில் மின்சார ஒளி மிக மிகத் தேவையானதாகும். மூன்று அதி உயர் திறன் உள்ள இறைச்சிக் கோழிகள் இலங்கையில் Cornish Cross, Grinphield Marshall மற்றும் Moyer's K-22 போன்றவையே பிரசித்தி பெற்றறைவையாகும்.



Cornish Cross



Grinphield Marshall



Moyer's K-22

ஆரோக்கியாமான இறைச்சிக் கோழி வளர்ப்பில் மருந்து மற்றும் தடுப்பூச்சி மிக அவசியம். இதோ தடுப்பூச்சி அட்டவனை.

| | | | |
|---|---|---|---|
| ஒரு நாள் குஞ்சு | Mareks | (மறிக்ஸ்) | பின் கழுத்தில் ஊசி |
| 5 ~ 7 வது நாள் | RDV F1 | (ரணிக்கட்) | |
| 14 வது நாள் | IBD Vaccine | (கம்புறோ) | |
| 21 வது நாள் | RVD Lasat | (ரணிக்கட்) | குடிநீருடன் |
| 28 வது நாள் | IBD Vaccine Booster | (கம்புறோ) | குடிநீருடன் |

எமது நாடான இலங்கையில் Cornish Cross என்ற இனமே இறைச்சிக்காக பெரும்பாலும் வளர்க்கப்படுகின்றது.

தரமான நிறையுள்ள ஆரோக்கியமான இறைச்சிக் கோழி வளப்பிற்கும் பின்வரும் முறையில் உணவு அளிப்பதே மிக முக்கியமானதாகும்.

| நாட்கள் | நிறை கிராம் |
|---|---|
| 1 ~ 7 | 21 |
| 8 ~ 14 | 38 |
| 5 ~ 21 | 58 |
| 22 ~ 28 | 80 |
| 29 ~ 35 | 96 |
| 36 ~ 42 | 110 |
| 43 ~ 45 | 122 |

100 இறைச்சிக் கோழி வளர்ப்பிற்கு 5 அடி அகலமும் 20 அடி நீளமும் கொண்ட ஒரு கூடு போதுமானது. அதற்கான செலவு கூடு அமைக்கும் இடத்தைப் பொறுத்தே அமையும்.

| | | | |
|---|---|---|---|
| கூட்டின் மொத்த செலவினம் | (20 அடி X 5 அடி) | ~ | 00000.00 |
| உணவுத் தொட்டிகள் | | ~ | 14400.00 |
| தண்ணீர் பாத்திரங்கள் | | ~ | 12000.00 |
| **மொத்த சொத்துக்கான செலவு (கூடு இல்லாது)** | | **~** | **26400.00** |

| | | | |
|---|---|---|---|
| குஞ்சுகளின் கொள்வனவு | (100 குஞ்சுகள்) | ~ | 7500.00 |
| உணவு | (6 வாரங்களுக்கு) | ~ | 35820.00 |
| மருந்து மற்றும் விட்டமின்கள் | | ~ | 8330.00 |
| போக்குவரத்து செலவினங்கள் | (குஞ்சு மற்றும் உணவு தரிவிப்புக்கள்) | ~ | 2000.00 |
| தற்செயல்ச் செலவுகள் | | ~ | 5000.00 |
| **மொத்த உற்பத்திச் செலவு** | **(ஒரு முறைக்கு)** | **~** | **58650.00** |
| **மொத்த உற்பத்திச் செலவு** | **(ஒரு வருடத்திற்கு)** | **~** | **469200.00** |

வருமானம்

ஒரு வருஷத்திற்கு குறைந்தது எட்டு முறைகள் மீண்டும் மீண்டும் இறைச்சிக் கோழியை வளர்க்க முடியும். ஆகவே வருடம் 8 முறை 800 இறைச்சிக் கோழிகளைப் பெறுவீர்கள். சராசரியாக 45 நாட்களில் ஒரு கோழி 2.200 முதல் 2.600 கிலோ நிறையை அடைந்திருக்கும். உயிர் விலையில் கிலோ ரூபா 330.00 தற்போது உள்ள நிலையில் ரூபா 72600.00 முதல் ரூபா 85800.00 வரை வருமானம் கிடைக்கும். 8 முறைகளில் வருடத்திற்கு ரூபா 580800.00 முதல் ரூபா 686400.00 வரை பெற்றுக் கொள்ள முடியும்.



No: 17, Raja Veethi, Atchuvely$_{(NP)}$, Sri Lanka | Tel: 94(0) 777 204 883
www.royjoygroup.com | farm@royjoygroup.com